**05.11.2025**

**O.S.No.111/2001**

**வா.சா.1 : ரங்கநாதன்**

**<u>9-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1) இந்த வழக்கு என்னென்ன பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாயார் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்தது செல்லாது என்று கோரி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொத்தில் யாரும் இடைஞ்ல் செய்ய கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. நான் கேட்டுள்ள பரிகாரத்தில் 30.06.1995, 03.07.1995 தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் படி எனக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளதாகத்தான் கோரி உள்ளேனே தவிர நான் சொல்வது போல எனது தாயார் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்தது செல்லாது என்று கோரவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் கோரி உள்ள வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.48/2005 ல் வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனது அம்மா இறந்த பின்னிட்டு என் அண்ணனும் அண்ணன் மகன்களும் எனது சுவாதீனத்திற்கு இடைஞல் செய்ய கூடாது என்று வழக்கு போட்டுள்ளேன். நான் இரண்டாவது போட்ட வழக்கில் மேற்படி 23.07.2001 தேதியில் எனது அண்ணன் மற்றும் அண்ணன் மகன்கள் வழக்கு சொத்தில் தொந்தரவு செய்துள்ளார்கள் என்று விவரத்தை சொல்லி வழக்கு போட்டுள்ளேனா என்றால் சொல்லி வழக்கு போட்டுள்ளேன்.

2) நான் இரண்டாவது போட்ட வழக்கில் மேற்படி 23.07.2001 தேதியில் எனது அண்ணன் மற்றும் அண்ணன் மகன்கள் தொந்தரவு செய்துள்ளார்கள் என்று விவரத்தை சொல்லாமல் தான் வழக்கு போட்டுள்ளேன் என்றும் என்று சொன்னால் சரியல்ல. எனவே 111/2001 வழக்கை எவ்விதமாக சம்பவம நடைபெறாமல் வியாஜினமும் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதனால் தான்

23.07.2001 தேதிய சம்பவத்தை நான் பின்னால் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.48/2005 ல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல அ.வ.எண்.111/2001 வழக்கிற்கு எவ்வித வழக்கு மூலமும் எழவில்லை என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல அ.வ.எண்.48/2005 ல் உள்ள சொத்து விவரமும் அ.வ.எண்.111/2001 ல் உள்ள சொத்து விவரமும் ஒன்று தான் என்றால் சரிதான்.

3) அதேபோல அ.வ.எண்.48/2005 ல் உள்ள பிரதிவாதிகளும் அ.வ.எண்.111/2001 ல் உள்ள பிரதிவாதிகளும் ஒன்று தான் என்றால் அ.வ.எண்.111/2001 எனது அம்மா மீதும் அ.வ.எண்.48/2005 எனது அண்ணன் மற்றும் அண்ணன் மகன்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதலில் எழுதிய 30.06.1995 ல் தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் பக்கம் 6 உள்ள சொத்து விவரம் சரிதான். அதில் சேலம் கடலூர் மெயின்ரோட்டிற்கு வடக்கு, 4 அடி அகல கிழமேல் பொதுச்சந்திற்கும் தெற்கு, என்னுடைய இதர வீட்டிற்கும் கிழக்கு, நாராயண செட்டியார் வீட்டிற்கும் மேற்கு, இதன் மத்தியில் கிழமேல் 12 அடி தென்வட 60 அடி, மொத்தம் 750 ச.அடி என்றால் சரிதான். மேற்படி சொத்து விவரம் தவறு என்று எப்போது தெரியவந்தது என்றால் நான் தான் கண்டுபிடித்தேன். மேற்படி சொத்து விவரம் தவறு என்று தெரியவந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரிந்தது என்ற விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4) நகராட்சியில் பெயர் மாற்றம் செய்வதற்கு சென்றபோது தான் மேற்படி விவரம் தெரிய வந்தது. எந்த தேதி என்று சரியாக ஞாபகம் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் மேற்படி சொத்து விவரம் தவறு என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்குரையில் சொல்லி உள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் மேற்படி விவரத்தை நான் சொல்வது போல வழக்குரையிலும்

நிருபண வாக்குமூலத்தில் மேற்படி சொத்து விவரம் தவறு சொல்லவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 09.12.1998ல் போட்ட பிழைத்திருத்த பத்திரத்தில் தெளிவாக எந்த இடத்தில் பிழை உள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டு பிழைத்திருத்தல் பத்திரம் போடப்பட்டது என்றால் சரிதான். நான் தான் இந்த விவரத்தை என் அம்மாவிடம் சொன்னேன். மேற்படி பிழைத்திருத்தல் பத்திரம் எழுதும் போது நான் உடன் செல்லவில்லை.

5) என் தாயாரிடம் கொடுத்துவிட்டேன். அவர் பிழைத்திருத்தல் பத்திரம் தாக்கல் செய்து பதிவு செய்து கொடுத்துவிட்டார். அப்போது என் தாயாருக்கு வயது 70. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி பிழைத்திருத்தல் பத்திரம் எழுதும்போது நான் தான் உடன் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. **முதலில் போட்ட பிழைத்திருத்தல் பத்திரத்தில்** க.எண்.24/பி,24 இ-ல் லக்கம் உள்ள வீடுகளுக்கு **செக்குபந்தி விவரம் அதில் சேலம் கடலூர் மெயின்ரோட்டிற்கு வடக்கு, 4 அடி அகல கிழமேல் பொதுச்சந்திற்கும் தெற்கு, என்னுடைய இதர வீட்டிற்கும் கிழக்கு, நாராயண செட்டியார் வீட்டிற்கும் மேற்கு, இதன் மத்தியில் கிழமேல் 12-1/2 அடி தென்வட 60 அடி, மொத்தம் 750 ச.அடி** என்றால் சரிதான்.

6) மறுபடியும் 06.01.1999ல் மற்றொரு பிழைத்திருத்தல் பத்திரம் தாக்கல் செய்தோம். முதல் தடவை இரண்டாவது பிழைத்திருத்தல் பத்திரம் செய்வதற்குண்டான தவறு தெரியவில்லை. மின்வாரிய அலுவலகம் சென்றபோது தான் தெரியவந்தது. மேற்படி இரண்டாவது பிழைத்திருத்தல் பத்திரம் செய்தவற்கான அவசியம் மின்வாரிய அலுவலகம் சென்றபோது தான் தெரியவந்தது என்ற விவரத்தை வழக்குரையிலும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். பின்னிட்டு சாட்சியிடம் நிருபண வாக்குமூலத்தை காண்பித்து எங்கு அவ்வாறு சொல்லி உள்ளீர் என்று காண்பிக்குமாறு கேட்டபோது நிருபண வாக்குமூலத்தில் சொன்னமாதிரி ஞாபகம் இல்லை என்று சொல்கிறார்.

7) அவ்வாறு மேற்படி விவரத்தை நான் சொல்லாததால் தான் மேற்படி விவரத்தை நான் சொன்னேனா சொல்லவில்லையா என்பது பற்றி நான் மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 30.06.1995ல் பத்திரத்திற்கு போட்ட இரண்டாவது பிழைத்திருத்தல் பத்திரத்தில் 5வது பக்கத்தில் வரி 5ல் உள்ள வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். 6வது பக்கத்தில் தான் உள்ளது. அதேபோல **"மற்றபடி சர்வே எண்ணிலோ, விஸ்தீரணத்திலோ, தான சாசனத்தில் உள்ள ஷரத்துகளிலோ, மற்றும் சொத்து விவரங்களிலோ எவ்வித மாற்றமும் இல்லை"** என்றால் சரிதான்.

**8) இரண்டாவது பிழைத்திருத்தல் பத்திரத்தில்** உள்ள சொத்துவிவரத்தில் **சேலம் கடலூர் மெயின்ரோட்டிற்கு வடக்கு, 4 அடி அகல கிழமேல் பொதுசந்திற்கும் தெற்கு, ஏற்கனவே உமது பெயருக்கு தான சாஸ்திரமாக எழுதி வைத்த வீட்டிற்கும் மேற்கு, கருப்பண்ண கவுண்டர் வீட்டிற்கு கிழக்கு** என்று கண்டுள்ளது. இரண்டாவது பிழைத்திருத்தல் பத்திரத்தில் உள்ள சொத்துவிவரம் மற்றும் செக்குபந்தி விவரம் மாறி உள்ளது என்றால் சரியல்ல. எனவே நான் அவசர அவசரமாக நான் பிழைத்திருத்தல் பத்திரங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிழைத்திருத்தல் பத்திரங்கள் நல்ல எண்ணத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேற்படி தவறு தட்டச்சு பிழையோ கவனபிழையோ அல்ல என்றும் உள்நோக்கத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9) நான் தவறான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே நான் கோரி உள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் தான பத்திரம் எழுதிய காலத்தில் இருந்தே நான் சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 24.05.2001ல் எனது அம்மா தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தார் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு அண்ணன் மற்றும் அண்ணன் மகன்கள் என் தாயாரை கட்டாயப்படுத்தி ரத்து செய்ய வைத்துள்ளனர் என்று சொல்கிறார்.

10) மேற்படி தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் **மேற்படி தான பத்திரத்தை நடைமுறைப்படுத்த விரும்பாததாலும் என் தாயார் மேற்படி சொத்து விவரம் தன்னுடனே உள்ளது என்பதாலும் மேற்படி என்னுடைய மகன் எனக்கு அன்னவஸ்திரம் அளிக்காமலும் ஆதரவு செய்யாமலும் உள்ளதாலும் வேறு ஏற்பாடு செய்ய உள்ளதாலும் மேற்படி பத்திரத்தை ரத்து செய்வதாக** தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதும் போது ரத்து செய்வதாக நிபந்தனைகளுடன் எழுதவில்லை என்று சொல்கிறார். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் தவறான சொத்து காட்டி எழுதப்பட்டுள்ளதாலும் மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நடைமுறைப்படுத்தாதலும் மேற்படி எனது தாயார் கடந்த 24.05.2001 தேதியிட்ட தான ரத்து பத்திரம் சட்டப்படி செல்லும் என்று சொன்னாலும் என்னை கட்டுப்படுத்தும் என்று சொன்னாலும் சரியல்ல.

11) எனது தாயார் தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்தது வழக்கு போடுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தெரியும். அப்படி தெரிந்தும் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய கோரி ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி அமைதியாக உள்ளார். மேற்படி தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் உண்மை என்பதால் தான் நான் அதை பொறுத்து நான் எவ்வித விளம்புகை பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் இரண்டாவது முறை போட்ட வழக்கிலும் எவ்வித வழக்கு மூலம் இல்லாமலும் முதலில் தாக்கல் வழக்கிலும் எவ்வித வழக்கு மூலமும் இல்லாமலும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்காக செல்வாக்கை பயன்படுத்தி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12) மின் இணைப்பு பில்லிற்கும் மேற்படி சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் அவை வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

தண்ணீர் வரி பில்லிற்கும் மேற்படி சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் அவை வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்குகளை தூய்மையான கரங்களுடன் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

8,10 முதல் 12 வரை குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.05 17:57:51 +0530

**Subordinate Judge, Attur.**